**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**மேட்டூர்.**
**OS.No.** 109/2024
**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரியாஸ் | கணவர் பெயர் | : |
| தகப்பனார் பெயர் | ரவிக்குமார் | வயது | : 36 |
| கிராமம் | பி.என்.பட்டி | நாள் | : 23.06.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

இன்று 23.06.2026 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை :</u>

நான் வாதி வங்கியில் மேலாளராக பணி புரிந்து வருகிறேன். வாதி வங்கி சார்பில் தற்போது 1வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 07.12.2016 ம் தேதியிட்ட வங்கி கடன் விண்ணப்பம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. 07.12.2016 ம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.
3. 07.12.2016 ம் தேதியிட்ட கொதவை கடன் ஒப்பந்த பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.
4. 09.11.2018 ம் தேதியிட்ட கடன் உயிர்ப்பு ஆவணம் அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.
5. 22.10.2021 ம் தேதியிட்ட கடன் உயிர்ப்பு ஆவணம் அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.
6. 23.06.2023 ம் தேதியிட்ட கடன் உயிர்ப்பு ஆவணம் அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.
7. 03.05.2024 ம் தேதியிட்ட வாதியின் பெயரிலுள்ள வங்கி கணக்கு பட்டியல் **வா.சா.ஆ.7** ஆகும்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 10.07.2026 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.